# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**01.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில அரசு

### 1. சீனாவுக்கு இணையாக தமிழகத்தில் கைபேசி உற்பத்தி

- **செங்கல்பட்டு மாவட்டம்** மகேந்திரா சிட்டியில் ரூபாய் 1200 கோடி முதலீட்டில் **பெகாட்ரான் தொழிற்சாலை** அமைக்கப்பட்டுள்ளது.
- **இந்த ஆலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பேசியதாவது:**
    - தைவான் நாட்டின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான பெகட்ரான் நிறுவனம் தமிழகத்தில் கைபேசி உற்பத்தியை தொடங்குவதை வரவேற்கிறேன்.
    - உலகப் புகழ் பெற்ற நிறுவனம் இங்கு உற்பத்தியை தொடங்கி இருப்பது தமிழகத்துக்கு கிடைத்த பெருமை.
    - **அகில இந்திய அளவில் வணிகம் புரிதலை எளிதாக்கும் தரவரிசையில்** சாதனையாளர் மாநிலம் என்று அங்கீகாரம் பெற்ற முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக **தமிழகம்** உள்ளது.
    - நான்காம் தொழில் புரட்சியின் **மின்னணுவியல் துறை** மிக முக்கிய பங்கு வகிக்கிறது.
    - மின்னணுவியல் துறையை தமிழக அரசு வளர்ந்து வரும் துறையாக வகைப்படுத்தியுள்ளது.
    - இதை கருத்தில் கொண்டு தமிழகம் **மின்னணு மென்பொருள் கொள்கை** வெளியிடப்பட உள்ளது.

### 2. ரத்தக்கொடையாளர்கள் விவரம் பதிவிட தனிச் செயலி

- ரத்தக்கொடையாளர்களின் விவரங்களை பதிவிட **ரூபாய் 10 லட்சத்தில்** தனி கைப்பேசி செயலியும் கணினி மயமாக்கப்பட்ட பதிவேடும் உருவாக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- ஒவ்வொரு ஆண்டும் **அக்டோபர் முதல் நாள் தேசிய தன்னார்வ ரத்ததான தினமாக** கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டுக்கான தேசிய தன்னார்வ ரத்ததான தினத்தின் கருப்பொருள் ஒற்றுமையுடன் ரத்ததானம் செய்வோம்.
- ஒருங்கிணைந்த முயற்சியுடன் உயிர்களை காப்போம் என்பதாகும்.
- **20 நிமிடங்கள் போதும்:**
    - ரத்த தானத்தின் போது **350 மில்லி லிட்டர்** ரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது.
    - இதற்கு 20 நிமிடங்களே ஆகும்.
    - இந்த தளத்தில் ரத்ததான முகாம் மற்றும் ரத்தக்கொடையாளர்களை பதிவு செய்து கொள்ளலாம்.
    - ரத்த வகைகளின் இருப்பை தெரிந்து கொள்ளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
    - ரத்த மையங்களின் செயல்பாடுகளை கண்காணிக்க **e-RaktKosh** என்ற இணையதளம் செயல்பாட்டில் உள்ளது.

- ➢ இந்த தளத்தில் ரத்ததான முகாம் மற்றும் ரத்தக்கொடையாளர்களை பதிவு செய்து கொள்ளலாம்.
- ➢ ரத்த வகைகளின் இருப்பை தெரிந்து கொள்ளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## மத்திய செய்திகள்

### 1. 5ஜி சேவை இன்று தொடக்கம்

- ❖ **டெல்லி பிரகதி மைதானத்தில்** நடைபெறும் **ஆறாவது இந்திய கைபேசி மாநாட்டை** பிரதமர் மோடி தொடக்கி வைக்கிறார்.
- ❖ அப்போது தொலைத்தொடர்பின் திருப்புமுனையாக இருக்கும் பயிற்சி சேவையையும் அறிமுகப்படுத்துகிறார்.
- ❖ இதற்கான அலைக்கற்றை ஏலத்தின் மூலம் அரசுக்கு **ரூபாய் 1.50 லட்சம் கோடி** வருவாய் கிடைத்துள்ளது.
- ❖ **ஏர்டெல் ஐடியா-வோடோ, ஜியோ போன்ற நிறுவனங்களோடு, அதானியின் நிறுவனம்** சுமார் 26 ஜிகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில் 5ஜி அலைக்கற்றையை ஏலத்தில் எடுத்துள்ளது.
- ❖ 5ஜி சேவை நாட்டின் முக்கிய நகரங்களில் முதலில் அறிமுகப்படுத்தப்படும்.
- ❖ பின்னர் அடுத்த சில ஆண்டுகளில் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

### 2. சிறந்த தூய்மை நகரம்

- ❖ மத்திய வீட்டு வசதி நகரப்புற வசதி அமைச்சகத்தின் சார்பில் 50,000க்கும் கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் தூய்மையான நகரமாக **இராமேஸ்வரம் நகராட்சிக்கு தில்லியில்** நடைபெற்ற நிகழ்ச்சியில் விருது வழங்கப்பட்டது.
- ❖ குப்பை இல்லாத நகரங்களை உருவாக்கும் நோக்கத்துடன் பிரதமரால் தொடக்கி வைக்கப்பட்ட **தூய்மை இந்தியா நகர்புற இயக்கம் 2.0** பதிப்பின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னேற்ற இந்த நிகழ்வு நடைபெற்றது.
- ❖ இதில் தூய்மையான சிறு பெரு நகரங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- ❖ பெரு நகரங்களுக்கான விருதுகளை குடியரசு தலைவர் திரௌபதி முர்மு வழங்கி கௌரவித்தார்.
- ❖ சிறுநகரங்களுக்கான **70 தூய்மை விருதுகளை** மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் **கௌசல் கிஷோர்** வழங்கினார்.

### 3. நாட்டின் மூன்றாவது வந்தே பாரத் ரயில் சேவை

- ❖ **குஜராத் தலைநகர் காந்தி நகரையும், மகாராஷ்டிரா தலைநகர் மும்பை** நாட்டின் மூன்றாவது வந்தே பாரத் ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.
- ❖ நவீன வசதிகள் கொண்ட வந்தே பாரத் ரயிலை இந்தியா உள்நாட்டிலேயே

தயாரித்து வருகிறது.

- முக்கியமாக வந்தே பாரத் ரயிலின் பெட்டிகள் சென்னையில் **உள்ள ஜிசிஎஃப்-இல்** தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- நாட்டின் ஏற்கனவே **புதுத் தில்லி-வாரணாசி, புதுடில்லி ஸ்ரீமாதமா வைஷ்ணவ தேவி காத்ரா** ஆகிய இருவழித்தடங்களில் வந்தே பாரத் ரயில் இயக்கப்பட்டு வருகின்றன.
- நாட்டின் 75 ஆண்டு சுதந்திரத்தை கொண்டாடும் வகையில் அடுத்த ஆண்டு ஆகஸ்டுக்குள் 75 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்நிலையில் மூன்றாவது வந்தே பாரத் ரயில் சேவையை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.
- **16 பெட்டிகளை** கொண்ட வந்தே பாரத் ரயில் ஆனது மணிக்கு **160 கிலோமீட்டர்** வரை செல்லும் திறன் கொண்டதாகும்.
- அகமதாபாத் நகரின் **தட்லெஜ் முதல் வஸ்தால்** வரை அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் சேவையின் முதல் கட்ட திட்டத்தை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.
- இதன் மூலமாக **21 கிலோமீட்டர்** தூரத்துக்கான மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

### 4. வங்கி வட்டி விகிதங்களை 0.5% உயர்த்தியது

- ஆர்பிஐ நாட்டில் பணவீக்கம் தொடர்ந்து அதிகமாகவே உள்ள நிலையில் அதை கட்டுக்குள் கொண்டுவரும் வகையில் வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தை **ரெப்போ ரேட்** இந்திய ரிசர்வ் வங்கி ஆர்பிஐ **0.5 சதவீதம்** உயர்த்தி உள்ளது.
- அதன் காரணமாக வீட்டுக் கடன், வாகனக்கடன், மாதாந்திர தவணை தொகை உள்ளிட்டவற்றுக்கான வட்டியை வங்கிகள் உயர்த்த உள்ளன.
- தற்போது **5.90 சதவீதமாக** நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இது கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகபட்சமாகும்.
- **பணவீக்கம்:**
  - பணவீக்கமானது நடப்பு 2022-2023 ஆம் நிதி ஆண்டில் **6.7 சதவீதமாக** இருக்கும் என ஆர்பியை கணித்துள்ளது.
  - அடுத்த ஆண்டு ஜனவரி முதல் பணவீக்கம் கட்டுக்குள் வரும் எனவும் ஆர்பிஐ நம்பிக்கை தெரிவித்துள்ளது.
  - நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ( ஜிடிபி) நடப்புநிதியாண்டில் **7.2 சதவீதமாக** இருக்கும் என்று ஆர்பிஐ முன்பு கணித்திருந்த நிலையில் அந்த கணிப்பை **ஏழு சதவீதம்** என தற்போது குறைத்துள்ளது.

### 5. இந்தியாவில் 2023 மோட்டோ ஜிபி பந்தயம்

- உலக அளவில் பிரதான மோட்டார் சைக்கிள் பந்தயமான மோட்டோ ஜிபி ரேஸ் இந்தியாவில் முதல் முறையாக அடுத்த ஆண்டு நடத்துவது உறுதி

செய்யப்பட்டுள்ளது.

- அந்த ஆண்டு **செப்டம்பர் 22-24** காலகட்டத்தில் அதை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- இதன் மூலம் சர்வதேச அளவிலான மோட்டார் பந்தயம் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவுக்கு திரும்புகிறது.
- கடைசியாக உத்தரபிரதேசத்தின் நொய்டா பகுதியில் இருக்கும் **புத் சர்வதேச சர்க்யூட்டில் 2011-2013** காலகட்டத்தில் **எஃப் 1 கார் பந்தயம்** நடைபெற்றது நிறைவு கூறத்தக்கது.
- தற்போது மோட்டோ ஜிபி பந்தயத்தை நடத்தும் நாடுகள் பட்டியலில் இந்தியா 31 வது களமாக இணைகிறது.
- மொத்தம் 21 பந்தயங்கள் நடத்தப்படும். அடுத்த காலண்டரில், இந்தியாவில் **2023 செப்டம்பரில் 14வது சுற்றை** நடத்த பட்டியலிடப்பட்டுள்ளது.
- முன்னதாக, மோட்டோ ஜிபி பந்தயத்தை இந்தியாவில் 7 ஆண்டுகளுக்கு நடத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 6. சர்வதேச புத்தாக்க குறியீடு

- நவீன தொழில்நுட்பங்கள் தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையில் புத்தாக்கம் முக்கிய இடத்தை பெற்று வருகிறது.
- புத்தாக்கத்தில் நாடுகள் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்பதற்கான ஆய்வை உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு (டபுள்யுஐபிஓ) ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.
- நடப்பாண்டுக்கான ஆய்வின் அடிப்படையில் சர்வதேச புத்தாக்க குறியீட்டை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.
- கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் **இந்தியா 6 இடங்கள் முன்னேறி** முன்னேற்றம் கண்டுள்ளது.
- தற்போது **40ஆவது** இடத்தில் உள்ள இந்தியா இந்த குறியீட்டில் தலைசிறந்த 40 நாடுகள் பட்டியலுக்குள் வருவது இதுவே முதல் முறையாகும்.
- அதுவும் குறிப்பாக கடந்த **2015 ஆம் ஆண்டில் சர்வதேச புத்தாக்க குறியீட்டில் இந்தியா 81 வது** இடத்தில் இருந்தது.
- **பிராந்திய அடிப்படையில் முதல் மூன்று நாடுகள்**
  - **தென் அமெரிக்கா**
    - ✓ **சிலி**
    - ✓ **பிரேசில்**
    - ✓ **மெக்சிகோ**
  - **ஆப்பிரிக்கா**
    - ✓ **தென்னாப்பிரிக்கா**
    - ✓ **போட்ஸ்சைனா**
    - ✓ **கென்யா**
  - **மேற்கு ஆசியா**
    - ✓ **இஸ்ரேல்**
    - ✓ **ஐக்கிய அரபு அமீரகம்**

- துருக்கி
- தென்கிழக்கு ஆசியா
  - தென்கொரியா
  - சிங்கப்பூர்
  - சீனா
- வட அமெரிக்கா
  - அமெரிக்கா
  - கனடா
- ஐரோப்பா
  - சுவிட்சர்லாந்து
  - ஸ்வீடன்
  - பிரிட்டன்
- மத்திய தெற்கு ஆசியா
  - இந்தியா
  - ஈரான்
  - உஸ்பெகிஸ்தான்

- **வருமானம் அடிப்படையில் முதல் மூன்று நாடுகள் அதிக வருமானம்**
  - சுவிட்சர்லாந்து
  - அமெரிக்கா
  - ஸ்வீடன்
- **அதிக நடுத்தர வருமானம்**
  - சீனா
  - பல்கேரியா
  - பயேரியா
- **குறைந்த நடுத்தர வருமானம்**
  - இந்தியா
  - வியட்நாம்
  - ஈரான்
- **குறைந்த வருமானம்**
  - குவாண்டா
  - மடகாஸ்கர்
  - எத்தியோப்பியா

## 7. 68வது தேசிய திரைப்பட விருதுகள்

- 68 ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா தில்லியில் **விஞ்ஞான் பவனில்** நடைபெற்றது.
- அப்போது 2020-ஆம் ஆண்டுக்கான **'தாதா சாகேப் பால்கே'** விருதை **ஆஷா பரேக்குக்கு** குடியரசு தலைவர் திரௌபதி முர்மு வழங்கினார்.
- நடிகர்,நடிகைகளுக்கு விருது:
  - 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்ட நடிகர்,நடிகைகளுக்கும் குடியரசு தலைவர் விருதுகளை வழங்கினார்.

- சிறந்த நடிகருக்கான விருதை சூரரை போற்று திரைப்படத்துக்காக நடிகர் சூர்யா பெற்றுக்கொண்டார்.
- **'தானாஜி:தி அன்சங் வாரியர்'** படத்துக்காக சிறந்த நடிகர் விருதை **அஜய் தேவ்கன்** பெற்றுக்கொண்டார்.
- சிறந்த நடிகைக்கான விருதை **அபர்ணா பாலமுரளியும்** திரைப்படத்துக்கான விருதை சூரரை போற்று தயாரிப்பாளரான **ஜோதிகாவும்** பெற்றுக்கொண்டனர்.
- சிறந்த திரைக்கதைக்கான விருதை சூரரை போற்று இயக்குனர் **சுதா கொங்கராவும்,** இசையமைப்பாளருக்கான விருதை **ஜி.வி.பிரகாஷ் குமாரும்** பெற்றுக் கொண்டனர்.
- சிறந்த பின்னணி பாடகிக்கான விருதை **பழங்குடியினத்தை** சேர்ந்த **நஞ்சமா** பெற்றுக்கொண்டார்.